# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம்** 29-08-2024 **வியாழக்கிழமை காலை** 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

### நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) நகராட்சி பூங்கா பராமரிப்பு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.949 (1) தீர்மானிக்கப்பட்டது

2) மார்த்தாண்டம் பேருந்து நிலைய கழிப்பிடம் போதிய வசதி இல்லாததால் விரிவாக்கம் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.949 (2) தீர்மானிக்கப்பட்டது

### 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.த.ரா. ஜெயந்தி கொண்டு வரும் தீர்மானங்கள்

1) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டில் ராஜீவ் நகரில் இருந்து வைசிராய் ரோட்டில் உள்ள சிண்டெக்ஸ் டாங்க் வாகன போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் அதை இடம் மாறி அமைத்து தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.950 (1) தீர்மானிக்கப்பட்டது

2) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டில் பெருங்குளம் கல்பாலத்தடி சாலையிலிருந்து ஹரி ஜென்ஸ் காலணி பாறைக்காய்விளை வைசிராய் ரோடு செல்லும் வழியில் இணைப்பு பாலம் பழுதடைந்து உள்ளதால் புதிய பாலம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.950 (2) தீர்மானிக்கப்பட்டது

3) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டில் கொட்டச்சான்விளை ஆர்.சி.சர்ச் பின் பகுதியில் ஊற்றாங்கரை செல்லும் பாதையில் 6 மின்கம்பங்கள் நட்டு தெருவிளக்கு அமைத்துதர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.950 (3) தீர்மானிக்கப்பட்டது

4) குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டு பெருங்குளம் உண்டனாகுழியில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் கிணறு ஒன்று உள்ளது. அதில் 50-க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீருக்காக பயன்படுத்தி வருகின்றனர். இந்த கிணறு பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் பழுதடைந்து காணப்படுகிறது. இதன் மேல்பக்க மூடியும் பழுதடைந்துள்ளதால் நாய், பூனை போன்ற விலங்குகள் தவறி கிணற்றினுள் விழுவதற்கும் வாய்ப்புள்ளது. மேலும் கிணற்றில் பக்க சுவர்களில் புல், பூண்டுகள் வளர்ந்துள்ளது. எனவே தயவு கூர்ந்து கிணற்றை பார்வையிட்டு சுத்தமான குடிநீரை பொதுமக்கள் பயன்படுத்த வழிவகை ஏற்படுத்தி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.950 (4) தீர்மானிக்கப்பட்டது

<u>3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) படப்பறை குளத்தில் போடப்பட்டுள்ள மறுகால் ஓடை புதிய பைப்லையின் போட்ட சமயத்தில் குளத்தில் போடப்பட்டுள்ள மறுகால் ஓடை அடைப்பட்டு உள்ளது. இதனை சரி செய்து அந்த ரோடு போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.951 (1) தீர்மானிக்கப்பட்டது

2) படப்பறை குளத்திலிருந்து வரும் சாக்கடை தண்ணீரை ஓடை அமைத்து தர இம்மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.951 (2) தீர்மானிக்கப்பட்டது

3) இடைவிளாகம் செல்லக்கண் வீட்டு பக்கத்திலிருந்து ராஜையன் அவர்கள் வீடு வரை உள்ள ரோடை காங்கிரீட் தளம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.951 (3) தீர்மானிக்கப்பட்டது

4) படப்பறை ஜார்ஜ் வீட்டு பக்கத்திலிருந்து சீயோன் வீடு வரை காங்கிரீட் ரோடு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மான எண்.951 (4) தீர்மானிக்கப்பட்டது

5) இடைவிளாகத்தில் உள்ள சேவியர் வீட்டு பக்கத்திலிருந்து நகராட்சி கிணறு வரை உள்ள ரோடை காங்கிரீட் ரோடு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மான எண்.951 (5) தீர்மானிக்கப்பட்டது

<u>8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கெ.சு. மினி குமாரி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குழித்துறை சிவன்கோவில் அருகாமையில் செல்லும் மழைநீர் வடிகாலில் அவசரமாக மூடி சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.952 (1) தீர்மானிக்கப்பட்டது

2) இலுப்பவிளையில் மின்கம்பம் எண்.36 மற்றும் 37-ல் மின் விளக்கு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.952 (2) தீர்மானிக்கப்பட்டது

<u>9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குழித்துறை - பாலவிளை சாலையில் திற்பிலாங்காடு திரு. ஜாண்சன் அவர்கள் வீட்டின் அருகாமையில் நிற்கும் மின்கம்பம் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூறாக நிற்கின்றன. எனவே மின்கம்பத்தை ஓரமாக நிறுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.953 (1) தீர்மானிக்கப்பட்டது

2) விளவங்கோடு சாலையிலிருந்து விளவங்கோடு மாலைச்சந்தை பின்பக்க சாலையை இணைக்கும் சாலையில் ஓரமாக நிற்கும் மின்கம்பத்தின் Stay கம்பியானது போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே அதனை மாற்றி போட்டு போக்குவரத்து வசதி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.953 (2) தீர்மானிக்கப்பட்டது

3) விளவங்கோடு மாலைச்சந்தை பின்பக்க சாலையிலிருந்து கல்லறை தோட்டத்திற்கு செல்லும் சாலையில் போடப்பட்டிருக்கும் மின்கம்பி ஆனது மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளதால் ஒரு மின்கம்பம் நட்டு மின்கம்பியை விபத்து ஏற்படாத வண்ணம் உயர்த்தி எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.953 (3) தீர்மானிக்கப்பட்டது

<u>10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஞா. ஜெயின் சாந்தி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) வார்டு எண் 10-ல் பனவிளையிலிருந்து பிலாமன் விளைக்கு செல்லும் பாதை மிகவும் சேதமடைந்து தாழ்வாக உள்ளதால் 4 அடி உயர்த்தி சாய்வாக காங்கிரீட் பாதை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.954 (1) தீர்மானிக்கப்பட்டது

2) வார்டு எண் 10-ல் பழவார் C.S.I சர்ச் அருகில் உள்ள கண்ணாட்டிவிளை பாதை சேதமடைந்து இருப்பதால் காவு வரை காங்கிரீட் பாதை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.954 (2) தீர்மானிக்கப்பட்டது

3) பனவிளையிலிருந்து வலது பக்கமாக (ஆறுமுகம், வேலுச்சாமி வீடு இருக்கும்) குடியிருப்பு செல்லும் பாதை மிகவும் சேதமடைந்து இருப்பதால் காங்கிரீட் பாதை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.954 (3) தீர்மானிக்கப்பட்டது

<u>13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.த.சா. பெர்லின் தீபா கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) 13-வது வார்டுக்குட்பட்ட தேவன்விளை - வடக்கு தெரு இன்டெர்லாக் சாலையை சீரமைத்து குடிநீர் குழாய் பதிக்கப்பட்டதனால் ஏற்பட்ட சாலையின் சேதத்தை நீக்கும் விதமாக புதிய கற்கள் பதித்து சீரமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.955 (1) தீர்மானிக்கப்பட்டது

2) 13-வது வார்டுக்குட்பட்ட தெறம்புவிளை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் இரண்டு மின்கம்பங்கள் மின்கம்ப எண்.31, 33 வாகனங்கள் போக்குவரதிற்கு இடையூறாக உள்ளதால் மேற்படி மின்கம்பங்களை சாலையின் ஓரத்தில் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.955 (2) தீர்மானிக்கப்பட்டது

<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.பா. ரீகன் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) 15-வது வார்டுக்குட்பட்ட திரு. தேவராஜ் அவர்கள் வீட்டின் முன் தொடங்கி காமனாட்டுவிளை நகராட்சி கிணறு வரையுள்ள மழைநீர் ஓடையானது உடைந்து பராமரிப்பு அற்று காணப்படுகிறது. ஆகவே உடனடியாக மழைநீர் ஓடை கட்டி தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.956 தீர்மானிக்கப்பட்டது

<u>16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கு. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) கொடுங்குளம் NTC டிப்போ பின்புற காலனியில் உள்ள வழிபாதை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (1) தீர்மானிக்கப்பட்டது

2) APJ நகர் தார் சாலை முடிக்கப்பட்ட பகுதியில் இருந்து NTC டிப்போ பின்புற வழிபாதை வரை சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (2) தீர்மானிக்கப்பட்டது

3) NTC டிப்போ பின்புறம் உள்ள கோடியாவிளை கொல்லகுளம் இணைப்பு சாலை நகராட்சி எல்கை வரை ஆக்கிரமிப்பு அகற்றி சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (3) தீர்மானிக்கப்பட்டது

4) கோடியாவிளை தனபாலின் வீட்டின் எதிர்புறம் நகராட்சி எல்கை முடிவு பகுதியில் மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (4) தீர்மானிக்கப்பட்டது

5) கோடியாவிளை கொல்லகுளம் இணைப்பு சாலையில் உள்ள வடிகால் பகுதியில் பெரும் மழை வெள்ளத்தால் அருகில் உள்ள வீடு அமைந்திருக்கும் பகுதியில் மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்க தடுப்பு சுவர் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (5) தீர்மானிக்கப்பட்டது

6) மார்த்தாண்டம் அஞ்சுவீடு பகுதியில் இருக்கும் நிலவியல் ஒடையை பராமரித்து மழைவெள்ளம் வீடுகளுக்குள் புகாமல் சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.957 (6) தீர்மானிக்கப்பட்டது

<u>21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) குலசேகரம் ரோடு கீழ்பம்மம் பேருந்து நிறுத்தத்திற்கு எதிர்புறம் உள்ள கல்வெட்டு சாலை விரிவாக்கம் செய்யப்பட்ட போது அதற்கு தகுந்தபடி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் சரி செய்யப்பட வில்லை. ஆகையால் அந்த கல்வெட்டு போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் வசதியாக சரி செய்யவும், அதேபோல் குலசேகரம் ரோடு நகராட்சி எல்கை முடியும் இடத்தில் மேற்கூறியபடி உள்ள குறுகலான கல்வெட்டை சரி செய்யவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (1) தீர்மானிக்கப்பட்டது

2) குலசேகரம் ரோடு பெட்ரோல் பங்கு முதல் யூனியன் வங்கி மார்த்தாண்டம் வரை வடிகால் ஒடை பழுதடைந்து உள்ளது.அதை சீரமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (2) தீர்மானிக்கப்பட்டது

3) சிறியகாட்டுவிளை சானல் ரோட்டில் இருந்து ஆண்டிபம்மம் வழிப்பாதை திரும்பும் இடத்தில் உள்ள இரண்டு மின்கம்பத்திலும் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (3) தீர்மானிக்கப்பட்டது

4) சிறியகாட்டுவிளை கார்திகேயன் வீட்டின் அருகில் மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (4) தீர்மானிக்கப்பட்டது

5) குலசேகரம் ரோட்டில் இருந்து மேலே காட்டுவிளை வழிபாதையில் உள்ள இரண்டு மின்கம்பங்களிலும் மின்விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (5) தீர்மானிக்கப்பட்டது

6) பம்மம் மெயின்ரோட்டில் ஓம் ஹார்டுவேர்ஸ் கடை பக்கம் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (6) தீர்மானிக்கப்பட்டது

7) கரூர் வைஸ்யா வங்கி அருகில் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (7) தீர்மானிக்கப்பட்டது

8) மேம்பாலம் துவங்கும் இடத்தில் புதிய மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (8) தீர்மானிக்கப்பட்டது

9) பம்மம் மெயின் ரோட்டில் சின்ன நாடார் வீட்டின் அருகில் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (9) தீர்மானிக்கப்பட்டது

10) குலசேகரம் ரோட்டில் தேவி காம்பிளக்ஸ் அருகில் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.958 (10) தீர்மானிக்கப்பட்டது

11) கீழ்பம்மம் பொது கிணற்றின் அருகில் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

.

மன்றத்தீர்மான எண்.958 (11) தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண் 1</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் கீழ்பம்மம் உரக்கிடங்கில் ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து முடிவுற்றுள்ளது. மேற்படி சுத்திகரிப்பு நிலையம் இயக்க வேண்டிய கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறது.

| | |
|---|---|
| Technical Assistant Grade - II | - 1 No. |
| Electrician Grade - II | - 1 No. |
| Mazdoor Grade - II | - 3 No. |

மேற்கண்டவாறு ஒரு ஆண்டிற்கு மேற்கண்ட பணியாளர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிமேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்**1741/2024/இ1

மன்றத்தீர்மான எண்.959 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண் 2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கழுவன்திட்டை OHT-க்கு செல்லும் பாதையில் 6” GI குடிநீர் குழாய் பழுதடைந்து பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே பழைய குழாய்களை மாற்றம் செய்து புதியதாக 6” GI குழாய்கள் பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.65,000/- (ரூபாய் அபத்து ஐந்தாயிரம்) தயாரிக்கப்பட்டது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 2023 பிரிவு 57(7)-ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் மூலம் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அ.கு:-</u>பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1037/2013/இ1

மன்றத்தீர்மான எண்.960 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 3

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3 இடைவிளாகம் உருவிளாஞ்சிவிளை பகுதியில் உள்ள திறந்தவெளி கிணற்றிலிருந்து குடிநீர் வினியோகம் செல்லும் குடிநீர் குழாய் பழுது ஏற்பட்டிருப்பதால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே குடிநீர் அவசியம் கருதி மேற்கண்ட இடத்தில் புதியதாக குடிநீர் குழாய் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.41,000/- தயாரிக்கப்பட்டது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 2023 பிரிவு 57(7)-ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு:-பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஜெயசிங் மூலம் பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**1038/2013/இ1

மன்றத்தீர்மான எண்.961 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 4

குழித்துறை நகராட்சி மயானத்தில் KNMT 2023-2024 திட்டத்தின்கீழ் ரூ.151.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது பணி முடிவுறும் நிலையல் உள்ளது. மேற்படி இடத்தில் ஏற்கனவே உள்ள திறந்தவெளி எரியூட்டும் தகன கட்டிடம் புதியதாக அமைக்கும் கட்டிடத்தின் முன்பகுதியில் உள்ளதால் மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைத்த பிறகு அக்கட்டிடம் பயன்படுத்த இயலாததாலும் மேற்படி கட்டிடம் இடையூறாக இருப்பதாலும் மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ.2,10,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம்) தயாரிக்கப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1741/2024/இ1

மன்றத்தீர்மான எண்.962 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 5

குழித்துறை நகராட்சியில் தமிழக அரசின் நகராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் குறித்து விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விவரப்படி பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

1) தமிழ் முரசு - 9744/-
2) தினமலர் - 9576/-
3) தினகரன் - 9975/-
4) தினத்தந்தி - 9840/-
5) மாலைமலர் - 9912/-

6) மாலை தமிழகம் - 23100/-

(Evening Tamil Nadu)

மேற்படி வரப்பெற்றுள்ள தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்..
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.963 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 6

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் நவீன காய்கறி சந்தை கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்ட கடைகளுக்கு கீழ்கண்ட விபரப்படி வைப்புத்தொகை திரும்ப கேட்ட வண்ணம் வரப்பெற்ற கடைத்தாரர்கள் விபரம் கீழ்கண்டவாறு.

| வரிசை எண் | பெயர் | கடை எண் |
|---|---|---|
| 1 | திரு.ரா. அஜித் | கருங்கல் சாலை கடை எண்.40 |
| 2 | திரு.பி. லிங்கேஸ்வரன் | கருங்கல் சாலை கடை எண்.29 |
| 3 | திரு.ற்றி. குமரேஷ் | கருங்கல் சாலை கடை எண்.17 |
| 4 | திரு.எஸ். றாபின்ராஜ் | கருங்கல் சாலை கடை எண்.31 |
| 5 | திரு.எஸ். செல்வராஜ் | கருங்கல் சாலை கடை எண்.19 |
| 6 | திரு.பி. புரூனோ | கருங்கல் சாலை கடை எண்.27 |
| 7 | திரு. மனோகரன்<br>ம./பெ.எம். ரெஜீ | கருங்கல் சாலை கடை எண்.15 |
| 8 | திரு.ஆர். பத்மகுமார் | கருங்கல் சாலை கடை எண்.34 |
| 9 | திரு.எ. காட்வின் பெஸ்ட்டி | கருங்கல் சாலை கடை எண்.39 |
| 10 | திரு.பி. சங்கர்ராம் | கருங்கல் சாலை கடை எண்.30 |
| 11 | திரு.எம். செல்லசுவாமி | கருங்கல் சாலை கடை எண்.12 |
| 12 | திரு. சிவபிரசாத் | கருங்கல் சாலை கடை எண்.28 |
| 13 | திரு.ஆர். விஜயகுமார் | கருங்கல் சாலை கடை எண்.41 |
| 14 | திரு. கிறிஸ்துதாஸ் | கருங்கல் சாலை கடை எண்.36 |
| 15 | திரு.எம். சேவியர் பாபு | காய்கறி சந்தை கடை எண்.D5 |
| 16 | திரு.சி. ராஜமணி | மாலைசந்தை |
| 17 | திரு. ஷாஜிகுமார் | மினிபாரா உந்துநிலையம் |
| 18 | திரு. எட்வின் ராஜேஷ் | பேருந்து நிலைய கடைஎண்.A3 |
| 19 | திரு.டேனி ஏசுதாஸ் | கருங்கல் சாலை கடை எண்.24 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மனுக்களுக்கு அன்னார்கள் செலுத்திய வைப்புத்தொகையினை கணக்கீடு செய்து திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றத்தீர்மான எண்.964 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 7

பொது சுகாதாரம் - குழித்துறை நகராட்சியில் உட்பட்ட 21 வார்டுகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் தேக்கி வைத்தல் விற்பனை செய்தல் தொடர்பான தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை வரப்பெற்றது. பட்டியல் தொகை கீழ்கண்டவாறு.

1) தினத்தந்தி - 8946/-

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்ற அனுமதிக்கு.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2389/2012/எச்1.

மன்றத்தீர்மான எண்.965 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான TATA ACE வண்டி எண் TN75AY3630 வாகனத்திற்கு வேலைகள் பார்ப்பதற்கு ABT INDUSTRIES LIMITED என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பணிகள் முடியப்பட்டு அதற்கான செலவின தொகை ரூ.11,458/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.119/2019/இ1.
மன்றத்தீர்மான எண்.966 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.75AZ2768-க்கு MAX Clean Oil குறைவாக இருந்தது நிரப்பியது மற்றும் Water Service செய்ததற்கான செலவு தொகை ரூ.2171/- ஆகும். மேற்படி தொகை ரூ.2171/- டெரிக் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு இந்நகராட்சி ஒட்டுநர் த. சுந்தர்சிங் அவர்களால் வழங்கப்பட்டது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1247/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.967 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 10

குழித்துறை நகராட்சி வார்டு எண்.17 வடக்கு தெருவில் முபாரக் ஹோட்டல் அருகே கழிவுநீர் கால்வாய் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் வழிந்தோடி பொதுமக்களுக்கு சுகாதாரகேடு விளைவிக்கும்படி உள்ளது. எனவே வடக்கு தெருவின் மேற்கு பக்கத்தில் உள்ள மழைநீர் வடிகால் அடைப்பு மற்றும் பழுது அடைந்துள்ளதால் மேற்கண்ட மழைநீர் வடிகாலை பழுதுகார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ளது. (முபாரக் ஹோட்டல் முதல் NUNU Kidz பள்ளிவரை) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1692/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.968 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 11

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் 15KVA, 30KVA, Generator with Automatic Maintance பணி ஆகஸ்ட் 2024-ல் முடிவடைவதால் அடுத்த ஒரு வருடத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1740/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.969 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.